இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 31.07.2026

# வீடியோ போடலாம், விடியலைத் தராது!

மேகதாது விவகாரம் குறித்து கர்நாடக மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி கணக்குக் காட்ட நினைத்தார் முதலமைச்சர் விஜய். 'இதனால் எந்தப் பயனும் இல்லை' என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்ததும் பின்வாங்கி விட்டார் விஜய். இருப்பினும் முதலமைச்சர் விஜயை வரவைத்து அந்த நாடகத்தையும் நடத்த கர்நாடக மாநில காங்கிரஸ் அரசு தயார் ஆகி வருகிறது.

"கர்நாடகா வரும் முதலமைச்சர் விஜய்யை மிகுந்த மரியாதையுடன் வரவேற்கக் காத்திருக்கிறேன். அவரிடம் கர்நாடகாவின் தற்போதைய நிலை குறித்து விளக்குவேன். காவிரி விவகாரம் குறித்து தொலைபேசியில் முதலமைச்சர் விஜய் என்னிடம் பேசினார். கர்நாடகாவின் நீர்நிலைகளைப் பார்வையிடவும் அவரிடம் கோரிக்கை வைத்துள்ளேன். மேகதாது உள்ளிட்ட கர்நாடகாவின் நீர்நிலைகளை முதலமைச்சர் விஜய் பார்வையிடுவதற்காக ஹெலிகாப்டர் தயார் நிலையில் இருக்கிறது" என்று கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் சொல்லி இருக்கிறார்.

**கர்நாடக முதலமைச்சர் சிவக்குமாரும் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்யும் சேர்ந்து நடத்தும் நாடகம் இது என்பது அம்பலம் ஆகிவிட்டது. 'விஜய் என்னிடம் பேசினார்' என்று கர்நாடக முதலமைச்சர் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு விட்டார். 'எங்களுக்கு கர்நாடகம் செல்லும் திட்டம் இல்லை' என்று த.வெ.க. அரசு மழுப்பியதும் பொய்தான் என்பதை கர்நாடக முதலமைச்சரின் பேட்டி உடைத்து விட்டது.**

**கர்நாடகாவை ஆள்வது காங்கிரஸ் அரசு. இங்கே இருப்பது காங்கிரஸ் தயவிலான த.வெ.க. அரசு. எனவே கர்நாடக காங்கிரஸ் அரசை விஜய் அரசால் வெளிப்படையாக எதிர்க்க முடியாது. இந்த நிலையில் இரண்டு தரப்பும் சேர்ந்து தமிழ்நாட்டு மக்களை, உழவர் பெருமக்களை ஏமாற்றும் முயற்சிகள் ஆகும்.**

மேகதாது அணை விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்திக் கொண்டு இருக்கிறார் கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவக்குமார். மேகதாது அணைக்கான திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை ஒன்றிய நீர்வள ஆணையத்திடம் வழங்குவது குறித்து கர்நாடக மாநில சட்டத்துறை அதிகாரிகளுடனும் வழக்கறிஞர்களுடனும் ஆலோசனை நடத்தியதாகச் செய்திகள் வருகின்றன. கர்நாடக மாநில எம்.பி.க்கள் ஆலோசனைக் கூட்டம் டெல்லியில் நடந்துள்ளது. இந்தக் கூட்டத்தில் கர்நாடக காங்கிரஸ் முதலமைச்சரும் கலந்து கொண்டுள்ளார். ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ.க.வைச் சேர்ந்த கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அமைச்சர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். எனவே மேகதாது அணையைக் கட்டியே தீருவது என்பதில் கர்நாடக மாநில அரசு எத்தகைய தீவிரத்துடன் இருக்கிறது என்பதை இது காட்டுகிறது.

"கர்நாடக எல்லைக்குள் மேகதாதுவில் அணை கட்ட மற்ற மாநிலங்களின் அனுமதி தேவையில்லை. இதை உச்சநீதிமன்றமே சொல்லி விட்டது. இதனை ஒன்றிய பா.ஜ.க. அரசின் அமைச்சரும் மாநிலங்கள் அவையில் சொல்லி விட்டார். அதற்காக கர்நாடக மக்களின் சார்பில் நன்றி தெரிவிக்கிறேன்" என்று கர்நாடக மாநில எம்.பி.க்கள் கூட்டத்தில் முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் பேசி இருக்கிறார். காங்கிரஸ் கட்சியும் பாரதிய ஜனதாக் கட்சியும் கூட்டுச் சேர்ந்து தமிழ்நாட்டின் உரிமையைத் தடுக்கப் பார்க்கிறார்கள். இந்த நிலையை தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் உணர்ந்ததாகத் தெரியவில்லை. பேச்சுவார்த்தை நடத்தி இழுத்தடிக்க நினைக்கிறார்.

**ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து பேசும் துணிச்சலும் இல்லை. காங்கிரஸ் கட்சியை கேள்வி கேட்கும் துணிச்சலும் இல்லை. இரண்டுமற்ற அரசாக விஜய் அரசு இருக்கிறது.**

**"உரிமையை நிலைநாட்டுவதாக இல்லாமல் பிரச்சினையை இழுப்பதாகவே அப்பேச்சுவார்த்தைகள் அமையும். காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவது தமிழ்நாட்டின் உரிமையை முற்றிலுமாக நிராகரிப்பது ஆகும். எனவே, இது குறித்து கர்நாடக அரசுடன் எத்தகைய பேச்சுவார்த்தையும் நடத்துவதால் பயனில்லை. இது கர்நாடக அரசிடம் தமிழ்நாடு பணிந்து போகும் நிலை ஆகும். மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் என்றும், அதற்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்கிவிட்டது என்றும், யார் எதிர்த்தாலும் கட்டியே தீருவோம் என்றும் கர்நாடக மாநில அரசு வெளிப்படையாக, தொடர்ச்சியாகச் சொல்லும் போது அவர்களிடம் பேசி என்ன ஆகப் போகிறது? அவர்களது பிடிவாதக் குணத்தை நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளப் போகிறோமா?" என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் சொல்வது முழு உண்மை ஆகும்.**

காவிரி நடுவர் மன்றம், காவிரி கண்காணிப்பு ஆணையம் ஆகியவற்றை மதிக்காமல் இத்தனை ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது கர்நாடக மாநில அரசு. அங்கே காங்கிரஸ் கட்சி ஆண்டாலும், பாரதிய ஜனதா கட்சி ஆண்டாலும் இதே நிலைமைதான்.

**தமிழ்நாட்டிற்கு காவிரி நீர் தர கர்நாடகம் மறுத்தால் அது நீதிமன்ற அவமதிப்பு. சட்ட மீறல். மேகதாது அணைகட்ட முயற்சிப்பது உச்சநீதிமன்ற இறுதித் தீர்ப்பை மீறுவது ஆகும். மேகதாது பிரச்சினைக்குத் தீர்வு காண நடுவர் மன்றம் அமைக்க சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து தீர்மானம் நிறைவேற்றிவிட்டு இப்போது பேச்சுவார்த்தை என்று போவது, நம் சட்டமன்றத்தின் மாண்பை விட்டுக் கொடுப்பது ஆகும். நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு மாறான நிலைப்பாடு ஆகும்.**

**தமிழ்நாட்டின் உரிமையைத் தாரைவார்க்கும் விதமாக கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும் செயலை தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் செய்யக் கூடாது. சட்ட ரீதியாக தமிழ்நாட்டு காவிரி உரிமை நிலைநாட்டப்பட்ட ஒன்று. அதனை அடகு வைத்து விடக் கூடாது.**

**முதலமைச்சர் விஜய் கர்நாடகா சென்று அணைக்கு முன்னால் நின்று வீடியோ போடுவதற்கு வேண்டுமானால் இது பயன்படுமே தவிர, உழவர்களுக்கு விடியலைத் தராது.**

●●

அடக்குமுறை அரசியலைக் கைவிட்டு ஆசிரியர் கி. வீரமணியின் பரப்புரைப் பயணத்துக்கு அனுமதி வழங்கிட வேண்டும்!

# "NEET, EWS Quota எதிர்ப்புப் போராட்டத்தைக் கண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசைவிட த.வெ.க. அரசுதான் அதிகம் மிரளுகிறது!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஜூலை 31-

"NEET, EWS Quota எதிர்ப்புப் போராட்டத்தைக் கண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசைவிடத் த.வெ.க. அரசுதான் அதிகம் மிரளுகிறது என்று கண்டனம் தெரிவித்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிடர் கழகம் நடத்தும் - ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் பரப்புரைப் பயணத்துக்கு உரிய அனுமதியை த.வெ.க. அரசு வழங்கிட வேண்டும் என்று தனது சமூக வலைதளப் பதிவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து நேற்று (30-07-2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**"NEET, EWS Quota எதிர்ப்புப் போராட்டத்தைக் கண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசைவிட த.வெ.க. அரசுதான் அதிகம் மிரளுகிறது!**

**தந்தை பெரியாரைக் கொள்கைத் தலைவர் எனச் சொந்தம் கொண்டாடும் த.வெ.க. அரசு பெரியார் திடலிலேயே போலிசாரைக் குவித்திருப்பது ஏன்?**



**திராவிடர் கழகத்தின் இருசக்கர வாகனப் பரப்புரைப் பயணத்துக்குக் கடைசி நிமிடத்தில் அனுமதி மறுத்ததற்கு என்ன காரணம்? யாரின் அழுத்தத்துக்குப் பணிந்து இதைச் செய்கிறார்கள்?**

**கடந்த காலங்களில் மிக அமைதியான முறையில், அறவழியில், கண்ணியத்தோடு இதே போராட்டங்களைத் தாய்க்கழகமாம் திராவிடர் கழகம் கட்டுப்பாட்டுடன் நடத்திக் காட்டியிருக்கிறது. அத்தகைய இயக்கத்தின் பரப்புரைப் பயணத்தைத் தடை செய்வது வன்மையான கண்டனத்துக்குரியது.**

**சிவப்பும் மஞ்சளும் சேர்ந்தால் கிடைப்பது காவி என்பது இதன் மூலம் உறுதியாகி விட்டது.**

**அடக்குமுறை அரசியலைக் கைவிட்டு, @AsiriyarKV அவர்களின் பரப்புரைப் பயணத்துக்கு உரிய அனுமதியை த.வெ.க. அரசு வழங்கிட வேண்டும்!"**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடகா அரசு தாக்கல் செய்த

# மேகதாது அணையின் விரிவான திட்ட அறிக்கை நிராகரிப்பு!

## காவிரி நதிநீர் ஆணையம் நடவடிக்கை!

புதுடெல்லி, ஜூலை 31 -

கர்நாடகா அரசு தாக்கல் செய்த மேகதாது அணையின் விரிவான திட்ட அறிக்கை நிராகரிக்கப் பட்டுள்ளது. காவிரி ஆற்றின் குறுக்கே தமிழ்நாடு எல்லையை ஒட்டியிருக்கும் மேகதாது பகுதியில் புதிய அணை கட்ட கர்நாடக அரசு முயற்சித்து வரும் நிலையில் அதற்கு தமிழ்நாடு அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இதனிடையே மேகதாது அணையின் விரிவான திட்ட அறிக்கை கடந்த 2019ஆம் ஆண்டு கர்நாடக அரசு ஒன்றிய அரசிடம் தாக்கல் செய்தது. ஆனால், அப்போதே விரிவான திட்ட அறிக்கையை ஒன்றிய அரசு நிராகரித்தது. தாக்கல் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை திருத்தியோ அல்லது புதிய விரிவான திட்ட அறிக்கையோ தாக்கல் செய்யலாம் என ஒன்றிய அரசு, கர்நாடகாவிடம் தெரிவித்திருந்தது.

இதையடுத்து, 2019ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையில் புதிய கூறுகளை சேர்க்குமாறு கடந்த 2026 ஏப்ரல் 21ஆம் தேதி அன்று ஒன்றிய நீர் ஆணையத்திற்கு கர்நாடக அரசு கடிதம் எழுதியுள்ளது.

ஆனால், கர்நாடக அரசு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தவை காவிரி நடுவர் மன்றம் மற்றும் 2018 உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முரணாக இருப்பதாக கூறி, அதை மீண்டும் கர்நாடக அரசுக்கே கடந்த ஜூன் 29ஆம் தேதி திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாக மத்திய நீர் ஆணையம் தெரிவித்துள்ளது.

'பூவுலகின் நண்பர்கள்' அமைப்பு தாக்கல் செய்த RTI கேள்விக்கு அளித்த பதிலில், இத்திட்ட அறிக்கை கடந்த மாதமே நிராகரிக்கப்பட்டதாக ஆணையம் கூறியுள்ளது.

2018ஆம் ஆண்டு முதன் முதலில் தாக்கல் செய்யப்பட்ட மேகதாது அணை திட்ட அறிக்கையில், குடிநீர் தேவைக்கு என்று கூறியதால் மட்டுமே கொள்கை அளவில் அனுமதி அளிகப்பட்டதாகவும், ஆனால், அதன் பிறகு தாக்கல் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையில் சிவன சமுத்திரம் நீர்மின் திட்டத்தை சேர்த்துள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளது.

பெங்களூரு நகரின் தற்போதைய நீர்த்தேவை என்ன என்ற உண்மையான விவரங்களை தவிர்த்து, பழைய புள்ளி விவரங்களை கர்நாடக அரசு குறிப்பிட்டுள்ளதாகவும், தற்போது காவிரியில் இருந்து எவ்வளவு நீரை கர்நாடகா பயன்படுத்துகிறது என்ற விவரங்களையும் தெரிவிக்கவில்லை.

மேலும், சிவனசமுத்திரம் நீர் மின் உற்பத்தி திட்டமும் மேகதாது அணை திட்டமும் ஒன்றோடொன்று இணைக்கும் வகையில் அமைந்திருப்பதே இந்த நிராகரிப்புக்கு காரணம். தேவையான திருத்தங்கள் செய்யப்பட்ட பிறகே அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும், திட்ட அறிக்கையில் தேவையான மாற்றங்கள் செய்து மீண்டும் சமர்ப்பிக்க கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தமிழ்நாடு – புதுச்சேரியில் இன்று தொடங்க இருந்த

## கோழி இறைச்சி வணிகர்களின் போராட்டம் வாபஸ்!

*சென்னை,ஜுலை.31-*

*தமிழகம் - புதுச்சேரியில் இன்று தொடங்க இருந்த கோழி இறைச்சி வணிகர்களின் போராட்டம் வாபஸ் பெற்றனர். கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழுவின் உத்தரவாத அடிப்படையில் போராட்டத்தை வாபஸ் கோழிக்கறி வணிகர்கள் பெற்றனர். தீவன கட்டுப்பாட்டு நெறிமுறைகளை அமல்படுத்த வலியுறுத்தி போராட்டம் அறிவித்திருந்த நிலையில் வாபஸ் கோழிக்கறி வணிகர்கள் பெற்றுள்ளனர்.*

தாம்பரத்தில் இருந்து

## சென்னை கடற்கரை நோக்கி வந்த புறநகர் ரயிலில் தொழில்நுட்ப கோளாறு

*சென்னை,ஜுலை.31-*

*தாம்பரத்தில் இருந்து சென்னை கடற்கரை நோக்கி வந்த புறநகர் ரயிலில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளது. தொழில்நுட்ப கோளாறு காரணமாக சுமார் 30 நிமிடமாக சென்னை பூங்கா ரயில் நிலையத்தில் ரயில் நிறுத்தப்பட்டுள்ளது.*

*பிரச்சனைக்குரிய வழித்தடத்தில் சென்ற புறநகர் ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டது.*

தமிழ்நாடு விவசாயிகளுக்கு துரோகத்துக்குமேல் துரோகம் செய்யும் 'சூட்டிங் மாடல்' த.வெ.க. அரசைக் கண்டித்து

# ஆக.3-ல் தஞ்சையில் கூடுவோம் - விவசாய விரோத CallSheet Government-க்கு தக்க பாடம் புகட்டுவோம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ட்விட்டர் பதிவில் சூளுரை!

**சென்னை,ஜூலை.31-**

**தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகத்துக்கு மேல் துரோகம் செய்யும் சூட்டிங் மாடல் த.வெ.க. அரசைக் கண்டித்து ஆகஸ்ட் 3-இல் தஞ்சையில் நடைபெறும் ஆர்பாட்டத்தில் கூடுவோம் என்றும், விவசாய விரோத 'கால் ஷீட் கவர்ன்மெண்ட்'க்கு தக்க பாடம் புகட்டுவோம் என்று தனது ட்விட்டர் பதிவில் சூளுரைத்துள்ளார்.**

**இகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:**



பயிர்க்கடன் தள்ளுபடியில் மோசடி - மேகதாது பிரச்சினையை கைக்கட்டி வேடிக்கை பார்ப்பது - மேட்டூர் அணையில் இருந்து ஜுன் 12 அன்று தண்ணீர் திறக்காதது - காவிரி பிரச்சினையில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தை கூட்ட மறுப்பது - கர்நாடக முதல்வரை சந்திக்கப் போவதாக Unofficial தகவல்களை உலவவிட்டு ஆழம் பார்ப்பது,,,

இப்படி தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகத்துக்கு மேல் துரோகம் செய்யும் #ShootingModel த.வெ.க. அரசைக் கண்டித்து,

கழகத்தலைவர் @mkstalin அவர்கள் வழிகாட்டுதலின்பேரில், கழகத்தின் சார்பில் தஞ்சை மாநகரில் வரும் ஆகஸ்ட்-3 அன்று மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளோம்.

தஞ்சையில் கூடுவோம் - விவசாய விரோத CallSheet Government-க்கு தக்க பாடம் புகட்டுவோம்!

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.